பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 21உ (6—9—67) புதன் ★ வெளியூர்: ஆவணி 22உ (7—9—67) வியாழன் [இதழ்: 71

சாக்ளாவின் முன்னோடிகள்!

கடந்த இருபதாண்டுக் காலத்தில் கருத்து வேற்றுமை காரணமாக மத்திய அமைச்சரவையிலிருந்து சாக்ளாவைப் போல் பதவி துறந்த மற்றையோர் :—

∴ தற்போது குடியரசுத் துணைத் தலைவராக இருக்கும் வி.வி. கிரி—நேரு அமைச்சரவையில் தொழில் அமைச்சராக இருந்தபோது!

∴ சி. டி. தேஷ்முக்—நிதியமைச்சராக இருந்தபோது!

∴ சாஸ்திரி அமைச்சரவையில் இருந்த மகாவீர் தியாகி—தாஷ்கண்ட் உடன்பாடு பற்றிய பிரச்சினைக்காக!

சாக்ளா மட்டும்தானா?

வெளிவிவகார அமைச்சராக—இந்தியத் தூதுக் குழுவின் தலைவராக இம்மாத இறுதியில் ஐ. நா. செல்ல இருந்த எம். சி. சாக்ளா இவ்வார இறுதியிலேயே மீண்டும் பம்பாய்க்குச் செல்கிறார் பதவியைத் துறந்த மனிதராக.

முந்திரா விவகாரத்தில் பல பெரும் புள்ளிகளை வெட்ட வெளிச்சமாகச் சுட்டிக்காட்டிய அவரது தீரம், இப்போது வேறு உருவில் திரும்பவும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

'மொழிப் பிரச்சினையில் கருத்து வேற்றுமை இருக்கிறது; சுதந்தரமாகக் கண்டிக்கப் பதவியிலிருந்து விலகுகிறேன்' என்று ஆகஸ்டு 31-ல் அவர் கடிதம் எழுதிய போதிலும், செய்தி உலகின் எந்த 'ஜாம்பவான்'களுக்கும் அதன் சாரம் முன்கூட்டி தெரிய வராமல் போனது வியப்பாக இருக்கிறது!

அதற்குப் பின்னர், செப்டம்பர் 1, 3, 4 ஆகிய தேதிகளில் காங்கிரசுச் செயற்குழு, புதுடில்லியில் கூடிக் கலைந்திருக்கிறது!

சாக்ளாவின் கடிதம், அங்கேயும் எவ்வித அறிகுறியினையும் ஏற்படுத்தவில்லை!

தூக்கத்தில் நடந்தது விழித்தெழுந்தவனுக்குத் தெரிந்திராமல் போனதுபோல், சாக்ளா இப்படிப்பட்ட காரியம் செய்திருக்கிறார்! சரியான பதில் இல்லையேல், அதனைச் செயலாக்கவும் போகிறார் என்பதனை உணர்ந்த போக்கு, இந்திராவிடம் பெயருக்குக்கூட காணப்படவில்லை!

இந்த உண்மையை சாக்ளா மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்!

எனவேதான் 'மாலை 3-மணிக்குள் பதிலை எதிர்பார்க்கிறேன்' என்ற தகவலை இந்திராவுக்குத் தந்துவிட்டு—ஏதும் செய்தி வராத காரணத்தால்—அடுத்த நிமிடமே தனது கடிதத்தை நேற்று செய்தியாளர்களிடம் வெளியிட்டிருக்கிறார்!

இந்த நிலையில், 'இத்தனை அவசரமா? இன்னும் கொஞ்சம் பொறுத்திருககலாமே?' என இந்திரா—ஒப்புக்காகவோ உண்மையாகவோ—எல்லாம் நிறைவேறிய பிறகு கேட்பதில் பொருளில்லை!

அடுத்ததாக, 'மொழிப் பிரச்சினையில் முக்கியத் தொடர்புள்ளவர்கள் பேசாமலிருக்க—வெளிவிவகார அமைச்சராக இருக்கும் சாக்ளாவுக்கு ஏன் இத்தனை அக்கறை?' என்ற ஒரு கருத்து மத்திய அமைச்சரவை வட்டாரங்களிலும், காங்கிரசின் சில தரப்புகளிலிருந்தும் கேட்கப்படுவதாகத் தெரிகிறது!

★ சாக்ளா இப்போது கல்வி அமைச்சராக இல்லை—உண்மை! ஆனால், 'முன்னாள் கல்வி அமைச்சர்' என்பதும் உண்மை!

★ அது மட்டுமல்ல; ஒரு வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றும் அவருக்கு—ஒரு நீதிபதியாக இருந்த அவருக்கு—ஐ. நா.-வின் இந்தியப் பிரதிநிதியாகச் செல்லும் அவருக்கு—மற்ற அமைச்சர்களைக் காட்டிலும் ஒரு அணுவளவாவது ஆங்கிலத்தின் பயன் -- உபயோகம் -- முக்கியத்தும் அதிகமாகத் தெரிந்திருக்க நியாயமிருக்கிறது! எனவேதான், ஆங்கிலத்தை அவசர அவசரமாகவோ அல்லது காலக் கட்டம் நிர்ணயித்துக் கொண்டோ அகற்றப்படுவதில் உள்ள ஆபத்தினை நன்கு உணர்ந்திருக்கிறார்!

[எஸ். ஆர்.]

★ எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சரவையின் 'கூட்டுப் பொறுப்பு' என்ற தத்துவத்துக்கு மதிப்பளித்திருக்கிறார்! நாடு ஏற்கிறதோ இல்லையோ—மற்ற அமைச்சர்களின் போக்கு எப்படியோ—அறிமுகமாகிக் கொண்டிருக்கும் அரசின் மொழிக் கொள்கையில், அவருக்கு கருத்து மாறுபாடு இருக்கிறது—எனவே, வெளியேறியிருக்கிறார்!

காங்கிரசு செயற்குழுக் கூட்டம் அவரது நம்பிக்கையினை வெகுவாகப் பாதித்திருக்கிறது!

ஆங்கிலத்தின் உபயோகத்தினை, இந்தி வெறி, மிக விரைவில் அழிக்க இருக்கிறது என்பதனை மேலிடத்து விவாதங்களிலிருந்து நேருக்குநேர் தெரிந்துகொண்டிருக்கிறார்; எனவே, மேலும் அங்கே இருக்க விரும்பாமல் பதவி துறந்திருக்கிறார்!

"நிர்வாகத் துறையில் மட்டுமல்லாது பயிற்சி மொழியாகவும் இந்தியை ('மற்றைய வட்டார மொழிகளும்' என்பது மறைமுக வேலைகளுக்காகக் கூறப்படும் ஒரு தந்திரமே) மாற்றுவதற்கு ஒரு காலக் கட்டம் நிர்ணயிக்க வேண்டும்" என்ற பிரச்சினையில், சுப்பிரமணியத்துக்கும்—மொரார்ஜி தேசாய்க்கும் ஏற்பட்ட விவாத மோதல் இங்கு நினைவுகூரத்தக்கது!

★ மொழிப் பிரச்சினையில் தமிழக அரசு அனுப்பிய குறிப்பினை சாதாரண நிர்வாகம் பற்றிய ஓர் அன்றாடப் பிரச்சினையாக இந்திரா கருதிவிட்டதனால் வந்த தவறு இது!

★ சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாணவர்கள் தந்த மனுவை, 'சிறுவர்கள் எழுப்பும் விருப்பம்' என்று அலட்சியப்படுத்தியதனால் விளைந்த காரியம் இது!

மொழிப் பிரச்சினைக்கு இந்திரா எங்கேயும் போக வேண் வேண்டியதுமில்லை; தமிழகத்தையே ஒரு கண்ணாடியாகக் கருதலாம்!

"தமிழகம் கூறிவரும் மார்க்கம்தான், மொழித் துறைக்கு மட்டுமல்லாது, நாட்டு ஒற்றுமைக்கே ஒரு சாதனமாகவும் இருக்க முடியும்" என்று—மொரார்ஜியின் 'பாஷை'யிலேயே பதிலளித்துப் பேசிய அமைச்சர் மாதவன் குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

சாக்ளாவின் பதவி விலகல், நாடு முழுவதிலும் திகைப்பு—வருத்தம்—பாராட்டு ஆகிய பிரதிபலிப்புகளை விளைவித்திருக்கிறது!

அரசியல்வாதிகள், நடுநிலையாளர்கள் ஆகியோரின் கருத்துக்கள் ஒருபுறமிருக்க, காங்கிரசுக்காரர்களின் எண்ணம் என்ன என்பது, கூர்ந்து கவனிக்கத் தக்கதாக இருக்கிறது!

சவானும், வி. பி. நாயக்கும், பதவி விலகல் பற்றி ஏதும் குறிப்பிடாமல் இருப்பதனை, சாதாரணமாகக் கொண்டுவிடுவதற்கில்லை!

அதைவிட முக்கியமாக, 'சாக்ளாவைப் பாராட்டுகிறேன்' என்று பரிந்து வந்து செய்தி தந்திருக்கும் பாட்டீல், அனைவரது பார்வைக்கும் படுகிற மனிதராகத் தெரிகிறார்!

ஏன் தெரியுமா?

சாக்ளாவைப் பாராட்டும் அநேக பாட்டீல்கள், மத்திய அமைச்சரவையிலும், காங்கிரசுக் கட்சியிலும் இருக்கிறார்கள்!

பாட்டீல் 'ஒரு முன்னாள்'—அதாவது, பதவி இல்லாதவர்! எனவே, பாராட்டியதுடன் அவரது கடமை முடிகிறது!

மொழிப் பிரச்சினையில், சாக்ளா போலவே கருத்து வேற்றுமை கொண்டிருக்கும் மற்றைய மத்திய அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம் நமது நிலை!

"மற்ற மாநிலங்கள் சில செய்வதுபோல் தமிழக அரசு, ஆங்கிலத்தை ஒருபோதும் அகற்றாது!

மாறாக, அது இங்கு எப்போதும் இருக்கும்; இன்னும் சிறப்பாக மூன்றாம் வகுப்பு முதல் கற்பிக்கப்படும்; கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கும்; ஆங்கிலம் அகற்றப்படமாட்டாது.

தமிழ் பயிற்சி மொழி என்பது அடிப்படைக் குறிக்கோள்! அவ்வளவுதான்!

அதற்கான முயற்சிகள் படிப்படியாகத்தான் மேற்கொள்ளப்படும்-காலக் கெடுவும் எதுவும் கிடையாது!"

கல்வி அமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்
(சென்னை விவேகானந்தா கல்லூரி மாணவர் அரங்கில்)

வட்டமிடும் வல்லூறுகளே-உணருக!

சிட்டுக் குருவிகளை வீழ்த்த இனி உங்களால் இயலாது!

"மிகச் சாதாரணமானவர்களால் துவக்கப்பட்ட தி. மு. கழகம், இன்று அரசாளும் பொறுப்பேற்றிருக்கிறது.

"முஸ்லிம் பெருங்கவிஞர் இக்பால் கவிதை மூலம் கூறினார்:—

"சிட்டுக் குருவிகள், வல்லூறுகளைப் போல் கொத்தும் திறனற்றவை; கூர்மையான நகமற்றவை; வல்லூறைவிடப் பலத்தில் குறைந்தவை; ஆனால், ஒரு காலம் வரும்—சிட்டுக் குருவிகள் வல்லூறை வெல்லும் காலம் வரும்! பாமர மக்கள் பாராளும் காலம் வரும்!"

என 25 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் பாடினார்.

"சிட்டுக் குருவிகள் வல்லூறை வென்றதுபோல், பாமரர்கள் இப்போது பாராளுகிறார்கள்!

"சிட்டுக் குருவிகள், வல்லூறை வென்றது மட்டுமல்ல—சிட்டுக் குருவிகளின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று வல்லூறுகள் யோசித்துக் கொண்டிருக்கின்றன இப்போது!

"இந்தச் சிட்டுக் குருவிகளை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் ஆற்றலே வல்லூறுக்கு இல்லாதபோது, அதைக் கவிழ்ப்ப 'கவிழ்ப்பேன்' என்ப் பேசுவது ஆசையின் விளைவே தவிர, ஆகக்கூடிய காரியமல்ல!

"நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும், 'நாம் சிட்டுக் குருவிகள்தான்' என்பதை மறக்கவில்லை! அதை மறந்தால், நாங்கள் கவிழ்ந்தோம்! அதை மறக்காத வரையில் நாங்கள் கவிழமாட்டோம்!

"அமைச்சர் பதவியில் நாங்கள் இருப்பதால், ஏதோ மகிழ்ச்சியோடிருக்கிறோம் என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்க வேண்டாம்!

"தேர்தலுக்கு முன்பேகூட நான் கூறியிருந்தேன்—'ஆட்சிப் பீடம் ஏறவேண்டும் என்பதில் எங்களுக்கு அவசரமில்லை; மக்கள் ஆணையிட்டால் வருகிறோம்; 'பொறுத்திருங்கள்—இன்னும் ஐந்தாண்டுக் காலம்' என்றாலும், பொறுத்திருக்கத் தயார்' என்று!

"ஆனால், நாட்டு மக்களுக்குத்தான் அவசரம்—ஆகாத ஆட்சியை எத்தனை நாளைக்குத் தாங்கிக்கொள்வது? இருளில் எத்தனை நாள் தவிப்பது? 'உதயசூரியன் ஒளி என்று கிடைக்கும்?' என்று ஏங்கிய மக்கள்தான் எங்களுக்கு ஆணையிட்டார்கள்—ஆளுகிறோம்!"

—அறிஞர் அண்ணா
(காஞ்சி மணிமொழியார் பாராட்டு விழாவில்)

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் பெரியார்

சென்னை, செப் 7—டாக்டர் சுந்தரவதனம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை, தோழர்கள் டி.கே. பொன்னுவேலு, டி.கே. கபாலி, ஒ.எஸ். பாலசுந்தரம் ஆகியோர் இன்று காலை கண்டு உடல் நலம் விசாரித்ததுடன், சென்னை மாவட்டக் கழகச் சார்பில் ஏற்பாடு செய்யும் அண்ணா பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

பெரியார் அவர்கள் செப். 22-ம் நாள் சென்னையில் நடக்கும் அண்ணா பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக ஒப்புதல் அளித்தார்கள்.

நாசப் பாதை நோக்கி!

"அமைச்சர் சாக்ளாவின் பதவித் துறப்பு, நாட்டின் துன்பியல்நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது, ஏனெனில், விவேகமும் தீர்க்க தரிசனமும் உள்ள மத்திய அமைச்சர்கள், எதுவும் செய்ய இயலாத நிலையை அது வலியுறுத்திக் காட்டுகிறது!

"இன்று இந்தி வெறிக் கும்பலிடம் மத்திய அரசு முற்றிலும் சிறைப்பட்டுக் கிடக்கிறது! அது கல்வியில் நாசப் பாதையிலும், நாட்டைப் பிளவுபடுத்தும் பாதையிலும் நாட்டினை அழைத்துச் செல்லுகிறது!"

--பிராங் அந்தோணி

அறிவிப்பு

'நம் நாடு' அடுத்த இதழ் 8-9-67 அன்று சென்னையிலும் மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

காங்கிரசின் சந்தர்ப்பவாதம்

முற்போக்குக் கட்சிகளின் இரட்டை வேடம்!

'தினமான்' 20—8—67 இதழ், 'இந்தியும் அரசியலும்' என்ற தலைப்பில் உருதுமொழியுடன் தொடர்புள்ள சில தகவல்களை வெளியிட்டுள்ளது. அவை பின் வருமாறு:—

"உருதுவை ஆதரித்தால் ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்று தெரிந்தவுடன், காங்கிரசுக் கட்சி, 'உத்தரப் பிரதேசத்தை இரு மொழி மாநிலமாக்குவோம்' என்று குரலெழுப்பியது!

பீகாரிலுள்ள சில அரசியல் கட்சிகள், 'உருதுவை மாநிலத்தின் இரண்டாது ஆட்சிமொழியாக ஆக்குவோம்' என்று கூறத் தொடங்கினர்; 'அப்படிச் செய்தால் நாங்கள் ஒப்ப மாட்டோம்; கூட்டணியிலிருந்து விலகிவிடுவோம்' என்று ஜனசங்கம் அதட்டத் தொடங்கியது!

'முற்போக்குக் கட்சிகள்' என்று தம்மை அழைத்துக்கொள்ளும் சில கட்சிகள், காங்கிரசைவிடக் குறைந்த அளவு வகுப்புவாதத் தன்மை கொண்டனவாக இருக்கவில்லை.

மொழிப் பிரச்சினையில் எழுந்த கருத்து வேறுபாடு காரணமாகக் காலஞ்சென்ற இராகுல் சாங்கிருத்யாயன், கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்துவிலகியபொழுதே இது நன்கு தெளிவாயிற்று.

இந்த 'முற்போக்குக் கட்சிகள்' உருதுவைப் பொறுத்தவரையில் நேர்மாறான கருத்துக்களைக் கூறி வந்துள்ளன.

ஓரிடத்தில இந்தக் கட்சிகள், 'உருது சிறுபான்மையோர் மொழி; எனவே, அதற்குப் [illegible] வேண்டும்' என்று

இன்னோர் இடத்தில்—இதே கட்சிகள், 'உருது தேசிய உணர்வை பிரதிபலிக்கும் மொழி; இது இந்துக்கள் — முஸ்லீம்கள் இருவருக்கும் பொதுச் சொத்து; எனவே, இதற்குத் தேசியத் தகுதி தரப்பட வேண்டும்' என்று கூறுகின்றன.

மொழிச் சிக்கலை அரசியலுடனும், மதத்துடனும், மாநிலத்துடனும் இணைத்து நாடு போதிய அளவு துன்பங்களை அனுபவித்துவிட்டது. மேலும் வேதனைகளைத் தாங்கிக்கொள்ளும் நிலைமையில் அது இல்லை.

பதவி விலக வேண்டியது காங்கிரசே!

"அரசியல் சட்டம், மதக் கட்டளையைப்போல மீறக்கூடாதது அல்லது மாற்றப்படக் கூடாதது என்றால்—அதில் திருத்தம் வேண்டுபவர்கள் சட்டமன்றப் பதவிகளிலிருந்து விலகிக் கொள்ளத்தான் வேண்டும் என்றால்—பதினாறு தடவைகளுக்கு மேலாக அந்த அரசியல் சட்டத்தைத் திருத்திய காங்கிரசு அரசு, எப்பொழுதோ பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

"அரசியல் சட்டத்திலுள்ள 395 பிரிவுகளும் இந்தியைப் பற்றி மட்டும் கூறவில்லை. கட்டாயத் துவக்கக் கல்வி—மதுவிலக்கு போன்று, அது ஏற்று நிறைவேற்ற வேண்டிய கொள்கைத் திட்டங்கள் பல உள்ளன.

"கட்டாயத் துவக்கக் கல்வியில் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட அளவிலிருந்து நாம் வெகு தொலைவில் உள்ளதோடு, மதுவிலக்குக் கொள்கையில் பின்வாங்கவும் தொடங்கியுள்ளோம்."

—'டெக்கான் ஹெரால்டு'
(வாசகர் கடிதப் பகுதி)

காரியக் கமிட்டியா?— காரியஸ்தர் கமிட்டியா?

இட்லரின் 'மெயின் கெம்ப்' ('என் சரிதம்') நூலைப் படிக்காதவர்கள் அதற்காக ஆயாசப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை! அது ஒன்றும் அறிவுக் களஞ்சியமு மல்ல—அனுபவப் போதனையு மல்ல!

தமிழ்நாட்டில் சிலர், காமராசரின் புகழ் பாடுவதற்காகவே எழுதி வெளியனுப்பும் 'மர்மக் கதை'களைப்போல், மூளையும் இருதயமும் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாது பிறந்த விசித்திரப் பிறவியின் விளையாட்டுத்தனமான கிறுக்கல் அது!

'தொண்ணூறு சதவிகிதம் சுய புராணம் — பத்து சதவிகிதம் தலைகிறுக்குத்தனமான தான் தோன்றி முடிவுகள் கொண்டதே' அந்தப் புத்தகம்!

ஆகவே, கோட்சே குறித்து அறிந்துகொள்ள நினைக்கும் ஆவலைப்போல், அந்தப் புத்தகத்தையும் படித்தவர்களுக்குத் திரும்பத் திரும்ப அதில் கிறுக்கப்பட்டுள்ள ஒரு வார்த்தை பற்றிய குழப்பம் வாழ்நாளளவும் தீருவதற்கு நியாயமில்லை!

'போல்கிஷ் (Folkish) ராஜ்யம்—போல்கிஷ் கலாச்சாரம்—போல்கிஷ் அமைப்பு என்றெல்லாம் அதில் அடிக்கடி வரும்.

இந்தப் 'போல்கிஷ்' என்றால் என்ன என்பதை, இட்லர்கூட ஓர் இடத்திலும் தெளிவாகச் சொல்லவில்லை!

அந்தப் புத்தகத்தின் வெவ்வேறு பக்கங்களில், ஒவ்வொரு வித [illegible] கிக்கொண்டு போவதைப் படிப்பவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்!

இட்லர்தான் சொல்லவில்லை—மற்ற வரலாற்று ஆசிரியர்களாவது விளக்கம் தெரிவித்தார்களா? இதுவரை அப்படி யாரும் அதற்கு விளக்கம் அளித்ததாகத் தெரியவில்லை!

'சனநாயக சோஷலிசம்' என்ற வார்த்தை காமராசர் போன்றோரிடம் சிக்கிக்கொண்டு, கிடைத்தவர்களையெல்லாம் தலைசுற்றச் செய்து வருவதுபோலவே, அப்போது இட்லரிடம் இந்தப் 'போல்கிஷ்' என்ற வார்த்தை சிக்கிக்கிடந்தது!

தன்னுடைய போக்கிரித்தனமான கொள்கைகளுக்கெல்லாம் இந்தப் போல்கிஷ் வார்த்தையைக் கருவாக வைத்து உருவம் கொடுக்க இட்லர் முயன்றான்!

இட்லரிசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இந்தப் 'போல்கிஷ்' என்ற வார்த்தைக்குப் பொருள் காணவேண்டும்; ஆனால், அது தெரியவில்லை! அதைப் பிதற்றித் திரிந்தவனுக்கே புரியவில்லை!

ஆகவே, புரியாத ஊருக்குப் போகாத வழியில் பயணம் செய்தன அவன் வாழ்வும் அரசியலும்! படுகொலை—பலாத்காரம்—'ஆரிய' வெறி என்பவைகளைத் தவிர, அவைகளில் உருப்படியாக ஒன்றுமில்லை!

'போல்கிஷ்' வார்த்தை ஒன்றுதான் இன்று அப்படி நம்மை விளையாட்டுக் காட்டுகிறது என்று நினைக்க வேண்டாம்; காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்டங்களில் பேசப்படும் பேச்சுகள், நிறைவேற்றப்படுவதாக அறிவிக்கப்படும் தீர்மானங்கள் ஆகியவையும், இட்லரின் 'போல்கிஷ்' வார்த்தையைப் போலவே, நம்மை அலைக்கழிப்பதற்குத் தவறுவதில்லை!

[illegible] தை நம்மால் புரிந்துகொள்ளப்படாதது பற்றி அது கவலைப்படுவதில்லை; நாஜிசத்திற்கு அதுதான் கரு!

காங்கிரசுக் காரியக் கமிட்டியின் நடவடிக்கைகளும் திர்மானங்களும், நம்மால் விளங்கிக் கொள்ள முடியாதவை; ஆனால், அவைதான் இனி காங்கிரசுக் கட்சியின் வாழ்வுக்கு அரண்! பிரசாரத்திற்கு மூலவேதம்!

இங்கிலாந்து அரசியலைப்போல் நிரந்தரமான அரசியல் சட்டம் இல்லாது, அப்போதைக்கப் போது சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் சட்டம் போட்டு ஆட்சிசெய்ய உலகத்தில் மற்ற நாட்டினரால் முடியாது! ஆங்கிலேயனால் ஆரம்பிக்கப்பட்ட 'குணதோஷ'த்தாலோ என்னவோ—இன்று காங்கிரசுக் கட்சி, தான் அவ்வப்போது கூடி நிறைவேற்றுவதாக விளம்பரப்படுத்தும் 'சந்தர்ப்பவாத'த் திர்மானங்களால் 'உலா' வரலாம் என்று உறுதியாக நம்புகிறது!

வெறும் தீர்மானங்களிலேயே அரசியல் பிரசாரத்தை நடத்திக் கொண்டிருப்பதற்குக் கம்யூனிஸ்டுகள்தாம் இதுவரை புகழ் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாகக் குப்பை கூட்டும் தொழிலாளர்களுக்கு விளக்குமாறு விநியோகத்தைப் பற்றிய சர்ச்சை எழுந்தாலும், கம்யூனிஸ்டுகள், விசயவாடா தீர்மானம்—விருதுநகர் பிளினம் முடிவு—வேகவதி ஆற்றுக்கரை மாநாடு—கள்ளக்குறிச்சி கவுன்சில் — என்றெல்லாம் தடபுடலான அடைமொழிகளைப் போட்டு, தொழிலாளர்களிடையில் பிரசாரத்தை வெளுத்து வாங்குவார்கள்.

அவர்களிடம், 'ஆட்சிமொழி பற்றி உங்கள் முடிவென்ன?' என்று யாரும் கேட்கக்கூடாது; 'ஆட்சிமொழி பற்றி உங்கள் கல்கத்தா மாநாட்டின் தீர்மானம் என்ன?' என்றுதான் கேட்கவேண்டும்! அவர்களும் அந்த அடிப்படையில்தான் பதில் சொல்லப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்! 'முதல் இண்டர் நேஷனல்'—'இரண்டாம் இண்டர் நேஷனல்' என்று அவர்கள் —பிறக்கும்போதே சங்கச் சட்ட திட்டங்களுக்கு ஏற்பவே பிறந்தார்கள்!

காங்கிரசுக்காரர்களுக்கு என்ன கேடு? பீறிட்டெழுந்த உணர்ச்சியும், வீறிட்டுக் கிளம்பிய விடுதலை வேட்கையுமல்லவா அவர்களைத் தோற்றுவித்தது?

லெனின் வளர்த்த இரஷ்யாகூட, இன்று மத்தியக் கிழக்கில் ஆயுதத் தளங்களுக்கு ஆசைப்படும் போக்கில் கீழிறங்கிவிட்ட போது, 'காந்தியார் வளர்த்த காங்கிரசு வெறும் தீர்மானங்கள் போட்டே அரசியல் நடத்தும் பரிதாபத்திற்கு ஆளாகிவிட்டது ஒன்றும் பெரிதல்ல என்கிறீர்களா?

இருக்கட்டும்; அதை, யோக்கியப் பொறுப்போடு அவர்கள் ஒப்புக் கொண்டால் சரி—அப்படி இல்லையே! 'காங்கிரசு அழிந்தால் நாடு அழியும்' என்று கொட்டி முழக்கும் மேதாவித்தனம் — கொள்கைகளில் தெளிவில்லா திருக்கும்போது--அடக்கத்திற்கு வழிவிட வேண்டாமா?

காங்கிரசுக் காரியக் கமிட்டி இந்த மாதம் 2-ம் நாள் நடைபெற்றது. அதில் எடுத்த முடிவென்ன? காமராசருக்காவது புரியுமா?

அரசியலைக் கரைத்துக் குடித்த தமிழ் நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள்கூட அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை!

மொழிப் பிரச்சினை பற்றி செப்டம்பர் காரியக் கமிட்டி எடுத்த முடிவு 1965 பிப்ரவரியில் மேற்கொண்ட முடிவின் அடிப்படையிலா அல்லது சூன் கமிட்டியின் தீர்மானத்தின் பேரிலா என்று அவைகளே குழம்புகின்றன!

1965 பிப்ரவரி தீர்மானம்—நேரு உறுதிமொழிக்குச் சட்ட உருவம் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு யோசனை சொல்லுகிறது.

1967 சூன் தீர்மானம் — அது

(3-ம் பக்கம் பார்க்க)

மொரார்ஜி தேசாயின் 'அதிகப்பிரசங்கி'த்தனம்

மலையாள இதழாசிரியர் கடும் கண்டனம்

இந்தித் திணிப்பு ஆபத்துக் குறித்து இந்திராவுக்குத் தந்தி

"இந்தியாவின் தொடர்புமொழியாக ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை அவசரப்பட்டு திணிக்கக் கூடாது"

என்று குறிப்பிட்டு, இலங்கையில் முன்னாள் இந்தியத் தூதுவராக இருந்தவரும், 'மாத்ரு பூமி' (காங்கிரசு) நாளிதழின் முதல் ஆசிரியருமான கே. பி. கேசவ மேனன், தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குத் தந்தி அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்தியாவின் இணைப்பு மொழி சம்பந்தமாக அவசரப்பட்டுத் தீர்மானிப்பதற்கும், விரைவிலேயே ஆங்கிலத்தை நீக்கி இந்தியை இணைப்பு மொழியாக்கவும் காங்கிரசுக் கட்சியும், மத்திய அரசாங்கமும் விரும்புவதாகத் தோன்றும் செய்திகளைக் காண்கிறேன்; இது முற்றிலும் நடைமுறைக்கு ஒவ்வாததாகும். பண்டித நேருவின் கொள்கைக்கும், அவர் இந்தி பேசாத மக்கட்குத் தந்த உறுதி மொழிக்கும் இது விரோதமானதாகும். மேலும் நாட்டின் ஒற்றுமைக்கும், சுதந்தரத்துக்கும் இது ஆபத்து விளைவிப்பதாகும்.

இம்முடிவு நடைமுறைக்கு வருமானால், இன்னும் சின்னாட்களில் இந்தி பேசும் மக்களுக்கும்-இந்தி பேசாத மக்களுக்கும் இடையே மிகப்பெரும் இடைவெளி ஒன்று உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதனால், 'சிவசேனை'யைச் சேர்ந்த இயக்கங்கள் நாடெங்கும் உருவாகுமோ என்றுகூட நான் ஐயப்படுகிறேன்.

ஏற்கனவே பல பிரச்சினைகளிலும், அரசு அவசரப்பட்டு முடிவெடுத்ததன் பயனாக, நாட்டின் ஒற்றுமை குலையக்கூடிய கட்டத்தில் நாடு உள்ளது.

ஆகையால், எச்சரிக்கையாகச் செயல்படுமாறும், இந்தி பேசாதோரின் மீது இந்தியைத் திணிக்காதிருக்குமாறும் உங்களையும், காங்கிரசுக் கட்சியையும், மத்திய அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக மொரார்ஜி தேசாயைப் போன்ற தலைக் குடிமகனார்கள் வெளியிட்டதாகக் கூறப்படும் வரைகடந்ததும் எரிச்சலூட்டக் கூடியதுமான கருத்துக்கள், என்னை மிகவும் வேதனையடையச் செய்கிறது.

காங்கிரசுக் கட்சியும், மத்திய அரசும் எடுக்கும் இறுதி முடிவு உண்மை நிலைமையை உணர்ந்ததாகவும் விவேகமானதாகவும் இருக்கும் என்ற நம்பிக்கை ஏற்படச் செய்ய செயல்படுவீர்கள் என்று உங்களை எதிர்பார்க்கிறேன்."

வழக்கு மன்றத்தில் தமிழ்

அமைச்சர் மதியழகன் வலியுறுத்தல்

"இன்றைக்கு ஒரு கட்சி இருக்கலாம்; நாளை ஒரு கட்சி இருக்கலாம்; ஆனால், மனிதனின் அடிப்படை உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்றால், அரசுக்கு வழக்கறிஞர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ள உரிமைகளை வரையறுப்பதில் வழக்கறிஞர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

"இப்பொழுதுதான் மக்கள் சுதந்தரத்தின் முழுப் பயனை நுகர ஆரம்பித்திருக்கிறார்கள்.

"தாய்மொழியான தமிழ்தான் எங்கும் இடம்பெற வேண்டுமென்று ஏழைகளுக்கு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

"நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தமிழ் மொழியில் வாதாடவும், நீதிபதிகள் தீர்ப்புகளைத் தமிழில் அழகாக வழங்கவுமான பெருமைகள் தமிழுக்கு வரவேண்டும்."

—சட்டக் கல்லூரி புதிய பட்டதாரிகள் வரவேற்பில்

ஆங்கிலம் கற்பிக்கும் 5,000 ஆசிரியர்கள்!

தமிழக அரசின் அனுமதி

தமிழகத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கென 5,000 செகண்டரு கிரேடு ஆசிரியர்களை நியமிக்கத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது தமிழகப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்புமுதலே ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் ஹையர் கிரேடு ஆசிரியர்களாகவே கருதப்பட்டு அதற்கான ஊதியத்தைத்தான் பெற்றுவருகின்றனர்; இனி அவர்களெல்லாம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தைப் பெறுவர்.

வாழ்க்கைச் செலவு குறைகிறது

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, ஆகஸ்டு 26-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் இரண்டு புள்ளிகள் குறைந்து 695-ல் நின்றது.

வெளியேற்றப்படும் தமிழர் அடுத்த ஆண்டு 2,0000 பேர்

இந்திய—இலங்கை உடன்படிக்கைச் (செயல்) சட்டப்படி அடுத்த ஆண்டு பிப்ரவரிக்கும்—செப்டம்பருக்குமிடையே 20 ஆயிரம் தமிழரைக் குடிபெயரச் செய்யலாமென்று இலங்கை கருதிவருகிறது.

மொரார்ஜியின் 'புதுவேடம்'

"திரு. மொரார்ஜி தேசாய் ஆணவத்துடன் அறிவித்திருப்பதுபோல், மறு பேச்சுப் பேசாமல் இந்தியை ஒப்புக்கொள்வது ஒன்றுதான் அரசியல் சட்டத்திற்குக் காட்டப்படும் 'விசுவாசம்' என்று ஏற்றுக் கொண்டுவிட்டால், பிறகு, 'விசுவாசம்' என்ற சொல்லுக்கே புதியதோர் ஆபத்தான விளக்கம் ஏற்படும்!

"மேலும், 18 ஆண்டுகளில் 18 தடவைகளுக்கு மேலாக அரசியல் சட்டத்தைத் திருத்திய ஓர் அரசின் உறுப்பினர், அரசியல் சட்டத்தைப் பற்றி இவ்வளவு பயபக்தியோடு பேசியுள்ளதால் நன்மை எதுவும் விளைந்துவிடாது"

என்று, 'டெக்கான் ஹெரால்டு' 2—9—67 நாளிதழ், தனது தலையங்கத்தில் கருத்தறிவித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் அமைச்சர் கருணாநிதி

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

செப்டம்பர் 8:

காலை 9 மணி: திருமணம்—(தமுக்கம் கலையரங்கம்); 10 மணி: திருமணம்—செல்லூர்;

பகல் 11 மணி: ஒத்தக்கடையில் கிழக்குப் பஞ்சாயத்து யூனியன் வரவேற்பு; 12 மணி: வெள்ளலூர்—பள்ளிக்கூடத் திறப்பு விழா;

மாலை 4 மணி: லாரி உரிமையாளர்கள் சங்கம்; 5 மணி: ஆர்விப்பட்டி – பொதுக்கூட்டம்; 6 மணி: பரவை — பொதுக் கூட்டம்;

இரவு 7 மணி: பாவாணர் மணி விழா; 8 மணி: மதுரை பொதுக் கூட்டம்-திலகர் திடல்; 10 மணி: நாடகத் தலைமை (அஞ்சற் பெட்டி 520) கலையரங்கம்.

செப்டம்பர் 9:

காலை 8-30: மணி: அல்லிநகரம்; 9 மணி: தேனி; 9-20 மணி: அரண்மனைபுதூர்; 9-45 மணி: கொடுவிலார்பட்டி; 10 மணி: வயல்பட்டி; 10-15 மணி: வீரபாண்டி; 10-45 மணி: தப்புக் குண்டு;

பகல் 11 மணி: வெங்கடாசலபுரம்; 11-30 மணி: ஜங்கால்பட்டி; 12 மணி: காமாட்சிபுரம்;

பிற்பகல் 12-15 மணி: சிப்பாலக் கோட்டை; 12-30 மணி: ஓடைப்பட்டி; 12-45 மணி: மூர்த்திநாயக்கன்பட்டி; 1 மணி: சுக்காங்கலபட்டி;

மாலை 4 மணி: மார்க்கயன் கோட்டை; 4-25 மணி: குச்சனூர்; 5-15 மணி: பழனிசெட்டி பட்டி; 5-30 மணி: முத்துத் தேவன்பட்டி; 6 மணி: வீரபாண்டி (தேனித் தொகுதி கீழ்க் கிராம வாய்க்கால் திட்டம் பரிசீலனை);

இரவு 7 மணி: கோட்டூர்; 7-15 மணி: சீலையம்பட்டி; 7-30 மணி: சின்னமனூர்—பொதுக்கூட்டம்; 10-30 மணி: உப்பார்பட்டி.

கி. மனோகரன்

எம். ஏ., எம். பி. சுற்றுப்பயணம்

செப். 9-ம் நாள்வரையில் புதுடில்லி—தணிக்கைக் குழுக் கூட்டங்கள்; அரசியல் சட்டத் திருத்த கூட்டங்கள்; 15, 16, 17, 18, 19: கோவை மாவட்டம; 20: சென்னை கா. அப்பாதுரையார் மணிவிழா; 21: சென்னை 47-வது வட்டம்; 22: சென்னை 98-வது வட்டம்; 23: சென்னை 31-வது வட்டம்; 24: சென்னை 47-வது வட்டம்: 25: சென்னை 8-வது வட்டம்; 26: சென்னை 37-வது வட்டம்.

குறிப்பு:— கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய விரும்பும் கட்சித் தோழர்கள் அந்தந்த பகுதி கிளை செயலாளர்களிடம் தொடர்புக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மதுரை முத்துவின் ஆக்கப்பணி

விவசாயிகள்--தொழிலாளர் மகிழ்ச்சி

மதுரை மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் 300 டாக்சி உரிமையாளர்கள், டாக்சிகளுடன் ஊர்வலமாகச் சென்று மீட்டர் சம்பந்தமான மனு ஒன்றை கலெக்டரிடம் அளித்தனர்.

* * *

மதுரை மாவட்டச் செயலாளர் எஸ் முத்து எம்.எல்.சி. அவர்கள் மாவட்ட கலெக்டரையும், எஞ்சினீயரையும் சந்தித்து, மேலூர் வட்டத்துக்கு உடன் தண்ணீர் திறந்துவிடுவதற்கு ஏற்பாடு செய்தது குறித்து மேலூர் வட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மதுரை முத்து கலைக் குழு

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

செப். 15 முதல் 18-வரை: திருச்சி வட்டம்; 21: ஆர்விபட்டி; 22: தக்கணங்குளம்; 23: ஆய்க்குடி; 24: நெடுங்குளம்.

கோலியனூருக்கு அண்ணா வருகை

ஒன்றிப்பு வரவேற்க ஏற்பாடு

29—8—67 பிற்பகல் 3-மணிக்கு கோலியனூர் ஊராட்சி ஒன்றிப்புக் கூட்டம் துணைத் தலைவர் ச. கோவிந்தசாமி தலைமையில் நடந்தது; அதுபோது, 11—9—67 அன்று கோலியனூர் ஒன்றிப்பு மன்றத்துக்கு வருகைதரவிருக்கும் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கவும், சென்னைத் தீ விபத்து நிதிக்காக மன்றத்தின் சார்பில் ரூ. 5,000 கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதே கூட்டத்தில் ஊராட்சி ஒன்றிப்புக்கு 'மித்திரன்' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'நம் நாடு' ஆகிய நாளிதழ்களை வாங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கலைக் குழு முகவரி:

புதிய கலை நிகழ்ச்சி

மதுரை முத்து கலைக் குழு,
அருணா லாட்ஜ்,
மதுரை-1.

தயாராகிறது!

'திருவிளக்கு'

அண்ணா மலர்

★ சங்க முத்தமிழுடையார்—
★ சமுத்திரப் படையுடையார் —
★ நமது மன்னராம் பேரறிஞர் அண்ணா!
★ அந்த ஒளி உதித்த நாள் செப்டம்பர் 15!
★ அந்நாளில் அண்ணனின் பொன்னடிக்கு திருவிளக்கு படைத்திடும் காணிக்கை.......

'அண்ணா மலர்'

★ மலை தலை சாய்வதில்லை! அலைகடல் ஓய்வதில்லை!
★ அறிவேடாம் 'திருவிளக்'கின் தரம் என்றும் அப்படியே!

★

விலையோ ரூ. 1-தான்!

இன்றே பதிவுசெய்து கொள்ளுங்கள். தனிமலர் வேண்டுவோர் ரூ. 1 அனுப்புக!

'திருவிளக்கு'—2/142, மவுண்ட் ரோடு—சென்னை-6.

காங்கிரசுக் கமிட்டியா?--காரியஸ்தர் கமிட்டியா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி வாய்திறக்காமல், மும்மொழிக் கொள்கையை வற்புறுத்துகிறது.

ஜூன் தீர்மானத்தின் அடிப்படையில் விவாதித்தே செப்டம்பர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

நேரு உறுதிமொழி என்ன ஆயிற்று? இருந்தாலும், 'அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் மொழிச் சட்டம் வரும்' என்று வழக்கம்போல் காமராசர் கதைக்கிறார்!

ஆட்சி மொழி பற்றி காங்கிரசின் முடிவு என்ன?—தெளிவாக – திட்டவட்டமாகக் காங்கிரசுத் தோழர் யாரும் பதில் சொல்ல முடியாது!

'காங்கிரசுக் காரியக் கமிட்டியின் பிப்ரவரித் தீர்மானம்—ஏப்ரல் விவாதம்—செப்டம்பர் முடிவு'—என்றெல்லாம், தீர்மானங்களின் திரைமறைவில் ஒளிந்துகொள்ளும் பரிதாபப் பிழைப்பு அவர்களுக்கு ஏனோ?

மொழிப் பிரச்சினை போகட்டும்! மற்றபடி, தெளிவான தீர்மானங்கள் போட்டுக் காங்கிரசு செயல்பட்ட திட்டங்கள் என்ன?

'திட்ட வளர்ச்சி' — 'திட்டமிட்ட பொருளாதாரம்' என்றெல்லாம் கொஞ்ச நாளைக்கு முன்பு கதை படித்தார்கள்! இன்று திட்டங்களும், திட்டமிட்ட பொருளாதாரமும், விருதுநகர்ப் பொது மக்களைப்போல், காங்கிரசாரின் கால்களை வாரிவிட்டன!

'தீண்டாமை ஒழிப்பு' — 'மதுவிலக்கு' என்றார்கள்! தீண்டாமை ஒழிப்பு இலட்சணத்தைப் பற்றி பாராளுமன்றக் கூட்டத்தில் சிரிப்பாய்ச் சிரித்தார்கள்! அதுபற்றிக் காரியக் கமிட்டி, 'காரியவாதமாய்' வாய்மூடிக் கொண்டது!

மதுவிலக்கு பற்றிய செப்டம்பர் தீர்மானம்போல் அயோக்கியத் தனமான —கழுத்தறுப்புத்தனமான தீர்மானம், வேறு இருக்க முடியாது.

சீனாவில் அபினியை அபரிமிதமாகக் கொண்டுபோய் இறக்குமதி செய்ய ஆங்கிலேயர் எடுத்த முடிவுக்கும் — 'மதுவிலக்கை அவரவர் விருப்பம்போல்' கடைபிடிக்கலாம் என்று காங்கிரசுக் கமிட்டி போட்ட தீர்மானத்திற்கும் வேறுபாடே இல்லை!

'ஒரு காலத்தில் நாட்டுக்கு உணர்ச்சியூட்டி ஒளிமிக்க பாதையைக் காண்பித்த காங்கிரசுச் செயற்குழுவிடம் மதுவிலக்குக் கொள்கைபற்றி மன்றாடும் நிலை தமக்கு ஏற்பட்டிருப்பதை, மதுவிலக்கு நடைமுறை பற்றி ஆராய்ந்து முடிவு சொல்ல அமர்த்தப்பட்ட குழுவின் தலைவர் தேக் சந்த், மனம் வெதும்பிச் சொல்லியிருக்கிறார்!

காந்தியாரே இன்று உயிர் பெற்று எழுந்து வந்தால்கூட அடையாளம் தெரிந்துகொள்ளாத காங்கிரசுக்காரர்கள் அந்தக் காரியக் கமிட்டியில் அமர்ந்திருப்பதை, தேக் சந்த் போன்றவர்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை போலும்!

"எதிராளி உன்னைப் பத்து முறை அறைந்தாலும், பதினோராவது முறையும் அவனுக்குக் கன்னத்தைக் காட்டு" என்று சொன்ன உத்தமர் காந்தி அமர்ந்த இடத்தில், இன்று, 'போலீசுக்காரன் என்ன—நாங்கள் நினைத்தால் மிலிடரி வரும்' என்று மார்தட்டும் காமராசர் உட்கார்ந்திருக்கிறார்! நவகாளி கலகத்தின்போது, 'உயிர் போனாலும் பாதகமில்லை' என்று அமைதி காக்க ஓடோடிச் சென்ற உத்தமர் உட்கார்ந்திருந்த இடத்தில், 'காஷ்மீரில் கலக நிலை தணிந்த பிறகு யாரை அனுப்புவது என்று ஆரூடம் பார்த்துச் சொல்வதாகத் தெரிவிக்கப்படும்' காமராசர் அமர்ந்திருக்கிறார்!

"நீ சொல்லும் கருத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது; என்றாலும், அதைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையைக் காக்க நான் உயிரையும் கொடுப்பேன்" என்று சொன்ன காந்தியாரின் இடத்தில்தான், 'இந்தியை ஒப்புக்கொள்ளாவிடில் இராஜினாமாச் செய்யுங்கள்; இந்தியை எதிர்ப்பது அரசியல் சட்டத்தையும் நாட்டையும் எதிர்ப்பதாகும்' என்று சிடுசிடுக்கும் மொரார்ஜி உட்கார்ந்திருக்கிறார்!

இத்தகையோரைக் கொண்ட இன்றையக் காங்கிரசுக் கமிட்டி காந்தியாரின் உயிர்க்கொள்கையான மதுவிலக்கை எப்படி அமுல்படுத்தும்?

இந்தியை அரசியல் சட்டத்தில் ஏற்றிவிட்டதாலேயே 'அதை யாரும் மீறக்கூடாது' என்று கூப்பாடு போடுவோர், அதே அரசியல் சட்டத்தில் இந்திக்கு அளிக்கப்பட்டுள்ள இடத்தைக் காட்டிலும் முக்கிய இடம் தரப்பட்டுள்ள மதுவிலக்குக் கொள்கையை 'விருப்பம்போல் கையாளலாம்' என்று கருத்தறிவிக்கும் காங்கிரசுக் கமிட்டி, சந்தர்ப்பவாதத் தீர்மானங்களின் நிழலில் அரசியல் நடத்தத் துணிந்துவிட்டதைத் தவிர, வேறு யோக்கியதை படைத்ததாக இனி நாம் ஒப்புக்கொள்ள முடியுமா?

காங்கிரசுக் கட்சிக்குக் குறிப்பிட்ட கொள்கை ஒன்றும் இனிக் கிடையாது!

'எண்ணெய் இராசதந்திரம்'—'அபின் இராசதந்திரம்' என்று அதிகாரத்தை நீடித்துக்கொள்வதற்கு ஏகாதிபத்தியங்கள் கையாண்ட முறையிலேயே, இனிக் காங்கிரசுக்கு 'மது இராசதந்திர'ம் மிஞ்சியிருக்கிறது!

"நான் வந்தால் மது கொடுக்கிறேன்; அதைக் குடிப்பதற்காகவாவது எனக்கு ஓட்டுப் போடு" என்று காங்கிரசு வெளிப்படையாகப் பிரச்சாரம் ஆரம்பித்தாலும் வியப்பில்லை!

அதனுடைய கொள்கையெல்லாம் இனி, இலட்சியத்தைச் சொல்லி—எதிர்காலத் திட்டத்தைச் சொல்லி மக்களிடம் அணுகுவதாக இல்லை!

'காங்கிரசு ஆட்சி வந்தால் மதுவிலக்கு இராது' என்று மதுக் குடியர்களை நம்ப வைப்பதே இனி அதன் நோக்கம்!

காங்கிரசு ஆட்சி நடக்கும் எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு படிப்படியாக எடுக்கப்படுவதும், அப்படிச் செய்வதற்குக் காரியக் கமிட்டி அதிகாரம் கொடுத்து விட்டதும், அதைத்தான் காட்டுகின்றன!

காந்தியத்தின் அடிப்படையில் இயங்கும் ஒரே தலைவர் இனி இந்தியாவில் அறிஞர் அண்ணா அவர்கள்தாம் என்பதை ஐயத்திற்கிடமின்றி காங்கிரசுக் கமிட்டித் தீர்மானம் நிரூபித்துவிட்டிருக்கிறது!

நிலையான ஆட்சியும், உறுதியான கொள்கைகளும், இனி காங்கிரசு செல்வாக்குள்ள இடங்களில் இருக்கவே முடியாது!

சட்டம்—அமைதி பற்றிய காரியக் கமிட்டித் தீர்மானமும்,—காங்கிரசுக்காரர்களின் காலித்தனங்களுக்கு இடமில்லை என்பதால்—எழுப்பப்படும் ஓலமே!

காங்கிரசல்லாத மாநிலங்களில், சட்டம் — அமைதி நிலைமை பற்றி அது மெத்தக் கவலைப் பட்டதாம்!

காஷ்மீர் என்ன—எதிர்க் கட்சியிடமா இருக்கிறது?

காங்கிரசல்லாத மாநிலங்கள் பற்றி அது பரிசிலனை செய்ததே, 'காலித்தனம்புரிவோர்—சட்டம்—அமைதியைக் கெடுப்போர் காங்கிரசுக் கூடாரத்திலுள்ளவர்களே' என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது!

'காங்கிரசுக்காரர்கள் அந்தமாநிலங்களில் பழிவாங்கப்படுகிறார்கள்' என்பதைச் சொல்ல வந்தால், அது, 'அடக்குமுறை; போலிசுராஜ்யம்' என்றுதான் பெயர் பெறுமே தவிர, சட்டம்—அமைதி பிரச்சினையாகாது!

காலித்தனம் புரிவோர் காங்கிரசுக்காரர்களாக இருப்பதும், அதனைக் கட்டுமீறுதபடி அந்தந்த மாநில அரசுகள் கண்காணிப்பதும்தான், சட்டம்—அமைதி பற்றி காங்கிரசுக் கட்சி ஒப்பாரி வைப்பதற்குக் காரணம்!

ஒரு சிலரின் கோபதாபங்களை உரசிப் பார்த்துக் கொள்வது தவிர, இனி அது, நாட்டு மக்கள் லட்சியம் செய்ய வேண்டிய அமைப்போ அல்லது முடிவு சொல்லும் குழுவோ அல்ல!

'இத்தனை நாளைக்கொருமுறை காரியக் கமிட்டி கூடவேண்டும்' என்று காங்கிரசு விதிமுறையில் எழுதப்பட்டிருக்கிறது; அதற்குக் காங்கிரசுத் தலைவர் தலைமை வகிப்பார் என்றும் அதில் நிச்சயமாக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்குக் காமராசருக்கு இருப்பது இந்த ஒரு பெருமைதான்—உரிமைதான்! 'இதையும் பாழ்படுத்திக் கொள்வானேன்' என்றுதான் அவ்வப்போது 'காரியக் கமிட்டி' கூடுகிறது!

வேறு வேலை இல்லாத முன்னாள் 'ராஜ்யாதிபதிகள்', வாதத் திறமை துருப்பிடிக்காமல் பார்த்துக் கொள்கிறார்கள்—அவ்வளவே!

இட்லரின் 'போல்கிஷ்' வார்த்தை போல், காங்கிரசுக் காரியக் கமிட்டியின் சொற்றொடர்களும் இனி யாருக்கும் புரியாது! ஏனென்றால், அதை விளக்கிக் கொண்டிருப்பதாகப் பேசித் திரிந்து சுமார் இரண்டு டஜன் பேர்வழிகள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது!

நமக்கு அது புரியாது—புரிய வேண்டிய அவசியமும் இல்லை!

'காங்கிரசு, 'காரியஸ்தர் கமிட்டி'யே தவிர, இனி, 'காரியக் கமிட்டி' என்று யாரும் நம்ப வேண்டாம்.

—தோழன்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--9--67

ஈரோடு

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: வி. வெ. இராமசாமி; பேசுவோர்: மு. இராமநாதன், இரா. மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ., ப கோபால் செ. அரங்கராசன் எம்.சி., இ. ஏ. மதார்சா, சிந்தனையாளன்.

மதுரை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர் : கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, எஸ். முத்து எம்.எல்.சி.

அருப்புக்கோட்டை

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : க. சிவராமன் ; பேசுவோர் : தேவகி பாண்டியன், எம். எஸ். இராமசாமி, ப. பெ. ந. நல்லதம்பி.

காஞ்சிபுரம்

டாக்டர் தருமாம்பாள் படிப்பகச் சார்பில், க. அறிவழகன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு ; இரவு 7–மணிக்கு சேக்குப்பேட்டை சாவடி தெருவில் ; தலைவர் : என். கிருட்டினன் எம்.எல்.ஏ., பேசுவோர் : சி.பி. சிற்றரசு, காஞ்சி கல்யாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி, எஸ். முருகேசன், சி. ஆறுமுகம்,

பழனி

மஜீத் நினைவுமன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு கோட்டைமேட்டுத் தெரு நேரு திடலில், பேசுவோர் : மாங்குடி மதியழகன்- கே. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., பி. எஸ். சேக் எம்.சி., அ. தமிழரசு.

அமைச்சர் மதியழகன்

சுற்றுப்பயணம்

சென்னை, செப். 6—

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் இன்றுஇரவு 8-15 மணிக்கு திருவனந்தபுரம் துரித இரயில் வண்டியில் மதுரை செல்கிறார்.

7-ந் தேதி காலை மதுரையில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருடனும் மற்ற உணவு அதிகாரிகளுடனும் உணவு நிலைமைகளைப் பற்றி விவாதிப்பார். அங்குள்ள உணவு நிலைமையை நேரில் சென்று கண்டு அறிவார்.

அன்று மாலை 7 மணிக்கு மதுரை தியாகராயர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் மணிவிழாவில் கலந்து கொண்டு-டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்கு அமைச்சர் கேடயம் வழங்கி உரையாற்றுவார்.

உணவு அமைச்சர், டாக்டர் சிதம்பரநாதன் அவர்களின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று இரவு 11 மணிக்குப் புறப்பட்டு 8-ந் தேதி காலை கோவை செல்கிறார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடனும் உணவுத்துறை அதிகாரிகளுடனும் உணவு நிலைமை, உணவுப் பங்கீட்டு முறைகள் பற்றி விவாதிப்பார்.

அன்று மாலை 3-30 மணிக்கு, அவிஞசிலிங்கம் செட்டியார் குடும்ப இயல் மகளிர் கல்லூரியில் நடக்கும் ஆசிரியர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

அன்று இரவு கொச்சி துரித வண்டியில் புறப்பட்டு காலை 8-10 மணிக்கு சென்னைவந்து சேருவார்.



பாலர் அரங்கம்

செப். 8, 9, 10-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'நீரில் வாழும் மனிதன்'

(முழு நீள இரஷ்யக் கலர் படம்)

கட்டணம் வழக்கம்போல்

பஞ்சப் படி உயர்வில் புதிய சாதனை !

ஆமதாபாத்தில் உள்ள 1,20,000-த்துக்கும் மேற்பட்ட நெசவாலைத் தொழிலாளர்கள், இது வரை பெற்றிராத அளவுக்கு ரூ. 184.21 பஞ்சப் படியாக இம் மாதம் பெறுகின்றனர்.

தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஜூலை மாதத்தில் 4 புள்ளிகள் உயர்ந்து 552-ஆக ஆனதை யொட்டியே இந்தப் பஞ்சப் படி உயர்வு.

சென்ற மாதம் ரூ. 182.67 பஞ்சப் படியாகப் பெற்றனர் ; அதுவும், அதற்கு முன் எப்போதும் பெற்றிராத தொகையாகும்.

தேனியில் அமைச்சர் கருணாநிதி

தேனி தி. மு. க. சார்பில் 9—9—67 காலை 9 மணிக்கு இலட்சுமி திரையரங்கில் தோழர் கே. பி. பி. எம். நாராயணசாமி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

குழுக் கூட்டம்

" மாயூரம் வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம் 9—9—67 மாலை 3-மணிக்கு மாயூரம் பயணிகள் விடுதியில் அவைத் தலைவர் பி. வெங்கடகிருட்டினன் தலைமையில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் எஸ். கணேசன் அறிவிக்கிறார்.

முகவரி

டி. கே. சினிவாசன்,
1916, முத்தோஜியப்பா சந்து,
தஞ்சாவூர்

சாக்ளா மட்டும்தானா ?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் இருப்பது கூர்ந்து பார்த்தால் தெரிகிறது ! காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தை உற்றுப் பார்த்தவர்களுக்குப் புரிகிறது !

சாக்ளா மட்டும்தானா ?

என்ற கேள்வி பிறக்கிறது!

தமிழின்மீது அக்கறைகொள்ளத் தேவையில்லாத ஒருவர், ஆங்கிலம் அவசரமாகவோ அநாவசியமாகவோ அகற்றப் படுவதால் ஏற்பட இருக்கும் ஆபத்தை உணர்ந்து பதவி விலகும்போது,

ஆங்கிலம் அகற்றப்படுவதாலும் இந்தி திணிக்கப்படுவதாலும்

இரு வகையில் பாதிப்பினைப் பெறும் நமது நிலையை உணராமலும், அங்கே உணர்த்தாமலும், இங்கே வந்து, 'ஏதும் ஆபத்து இல்லை' என்று கூறும் காமராசரின் நடவடிக்கைகளிலும் சந்தேகம் எழுகிறது !

பூதாகாரமாக வளர்ந்துவரும் இந்தி வெறியின் முன் செயலிழந்து வெளியேறும் ஒரு வலிவற்ற தன்மையினைத் தான், சாக்ளாவின் பதவி விலகல் மொத்தமாகக் காட்டுகிறது !

ஆங்கிலம் கல்வித் துறையில் அகற்றப்படும் தன்மைக்கு மட்டும் கருத்து வேறுபாடு கொண்டு விலகியிருக்கும் சாக்ளா, 'இந்தி மட்டுமே நாட்டுக்கும் நிர்வாகத்துக்கும்' என்ற மொழி வெறியர்களின் -- கருத்துக் குருடர்களின் போக்கினையும் சுட்டிக் காட்டி இருந்திருப்பாரானால்,

பிரச்சினைக்காக அவர் கொடுத்திருக்கும் விலை இன்னும் முழுமை பெற்றிருக்கும் !

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.